www.padippakam.com

10—3

டிசம்பர் '2001

இதழ் எண் : 93

விலை ரூ. 3/-

# ஏழைதாசன்

**- திங்கள் இலக்கிய இதழ் -**

✱ எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் — கண்ணதாசன்

## பொதுநலம் பாடும் கவிமகன்!
## சுயநலம் பேணா புவிமகன்!



பரம்பரை அறங்காவலர் - அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமான்கோவில், ஆசிரியர் - வீரபாண்டிய கட்டபொம்மன் மாத இதழ், மாநிலத் துணைத் தலைவர்- தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம், மதுரை, பொருளாளர்-பேரையூர் நந்தன நகர அரிமா சங்கம், பொருளாளர்- அன்புக்கரங்கள் சேவைச்சங்கம், பொருளாளர் - நண்பர்கள் சங்கம், மு. கி. தலைவர்- கவியரசு வைரமுத்து சமூக இலக்கியப் பேரவை, பேரையூர் ஆகிய பொதுநல அமைப்புகளில் பொறுப்பு வகிக்கிறார்.

பரம்பரை அறங்காவலர்

**மு. பரதபாண்டியன்**

அருள்மிகு மேலப்பரங்கிரி சுப்பிர- மணியசுவாமி திருக்கோவில்,

**பேரையூர் - 625 703,**

மதுரை மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com


# எய்ட்ஸ் நோயா? பயம் வேண்டாம்!

எய்ட்ஸ் தீர்க்க முடியாத ஒரு நோய் அல்ல. சித்த மருத்துவத்தில் குணமாகிறது. எய்ட்ஸ் என்று உறுதி செய்யப்பட்ட மருத்துவச் சான்றுகளுடன் வர வேண்டும்.

**நோயின் தன்மையைப் பொருத்து 100 முதல் 200 நாட்கள் வரை மருந்துகள் சாப்பிட வேண்டும். நடமாட்டம் இல்லாதவர்களை அழைத்து வர வேண்டாம்.**

H.I.V. கிருமிகள் முழுமையாக அழிக்கப்படும் வரை சிகிச்சை அளிக்கப்படும். மருந்துகள் சாப்பிட்டு முடித்த பின்பு 'P 24 ஆன்டிஜென்டெஸ்ட்' என்ற ரத்தப் பரிசோதனை செய்து பார்க்கவும். நெகட்டிவ் ஆக மாறும். இப்பரிசோதனை முறையே போதும். வெஸ்ட்ரன் பிளாட் பரிசோதனையில் நெகட்டிவ் ஆக வேண்டுமென்று விரும்புபவர்கள் தொடர்ந்து சிலகாலம் மருந்துகள் சாப்பிட வேண்டும்.

மருத்துவத் துறையில் 45 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணி ஆற்றியவர். 73 வயது நிரம்பியவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ் நோய் பிரிவிற்கு' மதுரை மாவட்டத்திற்குத் தலைவராய் இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளுக்குச் சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர்.



சித்த மருத்துவ மேதை :

**அரிமா டாக்டர் A.தேவராஜன், R.M.P.(IND)C.B.I.M.**

"எய்ட்ஸ் நோய் ஒழிப்பு மருத்துவ மையம் "7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் - 625 703.
(மனோன்மணி ஆஸ்பத்திரி) மதுரை மாவட்டம் போன் : 04549 - 25695

குறிப்பு : பேரையூரில் 7-3/125, பெருமாள் கோவில் தெருவில் மட்டுமே எனது மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேறு எங்கும் கிளைகளோ, ஏஜெண்டுகளோ கிடையாது. தரகர்கள் யாரும் என் பெயரைச் சொல்லி அழைத்தால் ஏமாந்துவிடாதீர்கள். ஆட்டோ டிரைவரிடம் 'மனோன்மணி ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்' என்று சொன்னால் அழைத்து வந்து விடுவார்கள்.

**மருத்துவ ஆலோசனைக்கும், பதிவிற்கும் கட்டணம் ரூ.25/- கட்டணமின்றி வரும் கடிதங்களுக்கு பதில் வராது.**

**பேரையூர் வருவதற்கு வழி :** மதுரை To சாப்டூர் பஸ் மார்க்கத்தில் பேரையூர் உள்ளது. வடக்கிலிருந்து வருபவர்கள் மதுரை வந்து பழங்காநத்தம் பஸ் ஸ்டாண்டிலிருந்து புறப்படும் 'சாப்டூர்' பஸ்ஸில் ஏறி T.கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம். தெற்கிலிருந்து வருபவர்கள் விருதுநகர் பஸ் ஸ்டாண்டிலிருந்து கல்லுப்பட்டி வழியாக பேரையூர் வரலாம்.


படிப்பகம்

www.padippakam.com

# நூல்கள், சிற்றிதழ்கள் கண்காட்சி

அனுப்புநர் :

**முல்லைஅமுதன்** லண்டன்

அன்புடையீர், வணக்கம்.

தாங்கள் தொடர்ந்து அனுப்பிவரும் 2 இதழ்களும் கிடைத்தன. நன்றி

ஈழத்து நூல் கண்காட்சியை சிறப்புற அண்மையில் நடத்தினோம். அடுத்த ஆண்டில் உலகளாவிய ரீதியில் நூல்களை, சஞ்சிகைகளை சேகரிக்கும் திட்டம்.

தங்களைப் போன்ற எழுத்தாளர்கள் நல்ல நூல்களை சேகரித்து அனுப்புவார்களாயின் — உதவி செய்ய தயாராய் உள்ளோம்.

இலைமறை காயாக இருக்கும் நூல்களையும் (பழையது / புதியது) தேடி எடுக்க உத்தேசம்.

சிறுசஞ்சிகைகளையும் கிடைக்கச் செய்யுங்கள்.

பெறுநர் :

**ஏழைதாசன்** புதுக்கோட்டை

---

தோழமை இதழாளர்கள் தங்களது இதழின் பிரதிகளை / நூல்களை 'ஏழைதாசன்' முகவரிக்கு போதுமான தபால்தலை ஒட்டி, 'லண்டன் நூல், இதழ் கண்காட்சி' என தலைப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். ஜனவரி மாத இறுதிக்குள் நாம் லண்டனுக்கு அனுப்பி வைப்போம். — ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

# ○ வாசகர்

★ தங்களின் ஐக்கூ-200 தொகுப்பு கண்டேன்; மகிழ்ந்தேன். எனது கவிதை ஒன்றும் இடம் பெற்று இருப்பது மிக்க மகிழ்ச்சித் தருகின்றது. இருநூறு கவிதைகளையும் தேடி 200 கவிஞர்களின் தொடர்பும் பெரும் கஷ்டத்தில் தொடர்பு கொண்டு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் துணிவோடு பெரும் முயற்சி எடுத்து ஐக்கூ-200 தொகுப்பை வெளியிடு செய்த துணிவு பாராட்டுக்குரியது மட்டுமல்ல உங்கள் இலக்கிய பசியையும் நினைத்ததை முடிக்கும் தூக்கா பணியை பாராட்ட தமிழில் வார்த்தைகளை தேடுகின்றேன். மிக்க பாராட்டுக்கள்.

● வேலணையூர் பொன்னண்ணா, டென்மார்க்

★ வைக்கம் வீரரின் வார்த்தைச் சுவடுகள் ஹைக்கூ கவிதைகளில் வலம் வந்துள்ளது. நிலைத்து நிற்கும் அர்த்தமுள்ள கவிதைகள் ஏழை தாசனால் ஏற்றம் செய்யப்பட்டது. வளரும் கவிஞரின் வார்த்தைப் பேழை யில் பழனி இளங்கம்பனின் கவிதைகளும் - இருநூறு. இதயங்களில் பதிய வைத்த தங்களின் பணிக்கு வாழ்த்துக்கள்!

● வீர பெருமாள், தன்மானக்குரல், கோவை-27.

★ ஐக்கூ-200 நன்றாகவே இருந்தது. என்றாலும் தமிழில் பாவும் பாவினங்களும் கொட்டிக் கிடக்கையில், நிப்பானிய ஐக்கூவைப் பிடித்துத் தொங்குவதை என்னால் ஆதரிக்க முடியாது. அந்த ஐக்கூ கூட தமிழ்கன்னி வகையைச் சேர்ந்ததுதான்.

● முனைவர் அருகோ, எழுகதிர், சென்னை-94.

★ ஏழைதாசன் - அய்க்கூ 200 - அய் பாராட்டும் விதமாகவே இதழில் எடுத்துப் போடுகிறோம். நல்ல முயற்சி. பாராட்டுக்கள்.

● சங்கமித்ரா, ஒடுக்கப்பட்டோர்குரல், சென்னை-48.

★ சிற்றிதழ் நடத்தும் சிரமங்களை அறிவேன். நீங்கள் பின் அட்டையில் குறிப்பிட்டுள்ளபடி இமாலயப் பணிதான். அஞ்சல்துறை ஒரு பெரிய எமன் சிற்றிதழ்களுக்கு மென்னியை பலவந்தமாக அழுத்துகிறது என்பது அனுபவபூர்வமான வெளிப்பாடு. அது சிறுபத்திரிகைகளின் சோகம்! பொதுவாக நல்ல படைப்புகளைத் தர முயல்கிறீர்கள். ஒவ்வாரு இதழிலும் ஒரு சாதனையாளரையும் அவரது படத்துடன் அறிமுகப்படுத்துவது ஆரோக்கியமான பணி. பின்-பாக்கள் நன்றாக உள்ளன. 10 ஆண்டுகளாகத் தளர்ந்து போகாத உங்களது பிடிவாதமான இலக்கிய சேவைக்குப் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள். புதுக்கோட்டை, பதிப்பகங்களுக்கும் குழந்தைப் பத்திரிகை வெளியீட்டுக்கும் புகழ்பெற்ற ஊர் அங்கிருந்து ஏழைதாசன் சிற்றிதழ் வருவது மேலும் புகழ் சேர்ப்பது ஆகும்.

● மூத்த எழுத்தாளர் வே. சபாநாயகம், விருத்தாசலம்-1.

படிப்பகம்

www.padippakam.com

# வட்டம்

★ தாங்கள் அனுப்பிய ஏழைதாசன் மாத இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி இந்த இதழ் இதற்கு முன்னர் வெளிவந்த இதழின் நன்றி நவில் இதழ் போல் உள்ளது. மற்றும் அனைத்து நண்பர்களும் இந்த இதழிற்கு முன்னர் உள்ள இதழ் வந்திருந்தால் ஹைக்கூ கவிதைகளை ரசித்திருக்கலாம் என்று சொன்னார்கள். இந்த இதழில் உள்ள தலையங் கத்தைப் படித்தாலே கடந்த இதழ் எப்படி சிறப்புப் பெற்றிருக்கும் என்பது நன்கு விளங்குகிறது. மென்மேலும் சிறப்பாக ஏழைதாசன் வளரவும் அதன் ஆசிரியரான தங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

● இரா. பாலசுப்பிரமணியன், அல்-கோபர், சவுதி.

★ தமிழ் மொழியின் வளர்ச்சி வரலாற்றில் நூற்பா, ஆசிரியப்பா, விருத்தம், வெண்பா, சந்தப்பா போன்ற பாவகைகளின் காலகட்டங்கள் இருந்தன. அதனைப்போல் 2001-ம் ஆண்டு ஐக்கூ பாக்களின் கால கட்டமாக இருக்கட்டும். ஐக்கூ கவிதைகளை வெளியிடுவதில் அதிக அக்கறை காட்டுகின்ற தாங்கள் அதன் இலக்கணம் வெளியிட்டு உதவ வேண்டும். அப்படி வெளியிட்டால் கற்பனா சக்தி மிகுந்த பலரும் ஐக்கூ படைக்க முற்படுவார்கள். எதற்கும் ஒரு வரைமுறை இருந்தால்தான் நிலைபெறும்.

● புலவர் ஆர். சண்முகம், நாடார்குலதீபம், காரங்காடு, குமரி

★ புதுக்கவிதையின் அமைப்பை ஏற்றுக் கொண்டு உரைவீச்சு, உரைத் துண்டு எனக் கூறவையே விரும்புகிறேன். கவிதை எனின் உரிய இலக் கணம் இருத்தல் வேண்டும். அவ்வாறே தலித், ஐக்கூ போன்ற பிறமொழி சொற்கள், கலப்பு மொழிகளை நீக்கப் பெரிதும் இக்காலத்தில், தமிழில் நுழைவதை விரும்பிலேன். ஐக்கூவைத் துளிப்பா, குறும்பா எனச் சிலர் குறிப்பிடல் ஓரளவு ஏற்புடையதே. அவையும் பிற மொழிக் கலப்பின்றி இலக்கண அமைவுடன் விளங்குதல் வேண்டும்.

● மு. இறைவிழியன், நற்றமிழ், புதுச்சேரி-5.

★ தொலைபேசி செய்தி அயல்நாடுகளில் இதழுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்ற உண்மையை அரிய முடிந்தது. இது தங்களின் உழைப் பிற்குக் கிடைத்த பரிசாகத்தான் எண்ண வேண்டும். மேலும் ஒரு இதழா ளனை இன்னொரு இதழாளன் பாராட்டுவது மிகுந்த பாராட்டுக்குரியது. இந்த ஆரோக்கியமான நிலை எல்லா இதழாளனிடமும் வர வேண்டும்.

● நந்தவனம் சந்திரசேகரன், திருச்சி-3.

ஆசிரியருடன் பேச...
நேரம் : இரவு 9 to 10.

© 04322—29532

படிப்பகம்

www.padippakam.com

# பிரான்ஸ் T.R.T. தமிழ்ஒலி வானொலியில்

## ஏழைதாசனின் ஐக்கூ-200 கவிதைகள் ஒலிபரப்பு

## ஐரோப்பா வாழ் தமிழர்கள் வரவேற்பு

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஏழைதாசன் ஆசிரியர் திரு. எஸ். விஜய குமார் அவர்கட்கு பிரான்சில் இருந்து வண்ணை எழுதுவது.

தாங்கள் தொடர்ந்து அனுப்பிவரும் ஏழைதாசன் கிடைத்து வருகிறான். படிப்பதோடு நிற்பதில்லை! பயனுள்ள வகையிலும் செய்கின்றேன்.

ஆம்! பிரான்சில் இருந்து ஒலிபரப்பாகி ஐரோப்பா எங்கும் இருபத்தி நான்கு மணிநேரமும் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் T.R.T. தமிழ்ஒலி வானொலியில் பணிபுரிகின்றேன். அவ்வானொலியில் எனக்கு இலக்கியத் தென்றல், கவிதை நேரம், வானொலிக் குறுக்கெழுத்துப் போட்டி, ஏடும் எழுத்தாணியும் என்னும் எழுத்தாளர்களைச் செவ்வி காணும் நிகழ்ச்சி ஆகிய பொறுப்புகள் தந்திருக்கின்றார்கள். இலக்கியத் தென்றலில் நூல் விமர்சனங்கள் எல்லாம் செய்வேன். பத்திரிகையைப்போல இல்லை பத்திரிகையைவிட வானொலி மிகச்சிறந்த ஊடகம். நாங்கள் இருந்த இடத்தில் இருந்து சொல்ல அடுத்த நிமிடத்திலேயே மக்களைச் சென்றடைகின்றது. அதனால்தான் எனக்கிருக்கும் நேரப் பஞ்சத்திற்கு மத்தியிலும் நிகழ்ச்சியை பொறுப்பேற்று இருக்கின்றேன். அதில் கவிதை நேரத்தில்தான் தங்களது சஞ்சிகைக் கவிதைகளும் ஒலிபரப்ப முடிகின்றது.

200 ஹைக்கூக் கவிதைகள் மிகச் சிறப்பாக இருந்தது ஒருநாள் நிகழ்ச்சியில் முற்றுமாக அதையே ஒலிபரப்பினேன். நேயர்களிடம் நல்லவரவேற்பு கிடைத்தது.

விரைவில் ஏழைதாசனையும் நூல் விமர்சனப் பகுதியில் சேர்த்துக் கொள்ள இருக்கின்றேன்.

வேறு விடயங்கள் இல்லை. தொடர்ந்து ஏழைதாசனை எதிர்பார்த்து இருக்கின்றேன்.

அன்புடன்,

**வண்ணை தெய்வம்**

படிப்பகம்

www.padippakam.com

# பொதுநலம் பாடும் கவிமகன்!
# சுயநலம் பேணா புவிமகன்!



கவிஞர் மு. பரதபாண்டியன் 1942-ல் பிறந்தார் தந்தை நா. முத்துக்குமாரசாமி மதுரையில் பி.ஏ. படித்தார். பேரையூர் அருள்மிகு மேலப்பரங்கிரி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பரம்பரை அறங்காவலராக விளங்குகிறார். நுகர்வோர் பாதுகாப்பு மையம், அரிமா சங்கம், அன்புக் கரங்கள், நண்பர்கள் சங்கம், வீரபாண்டிய கட்டபொம்மன் இதழ் போன்றவற்றில் முக்கிய பொறுப்பு வகிக்கிறார். குமுதம், அன்னம் விடு தூது, கண்ணியம், ஏழை தாசன் உள்ளிட்ட இதழ்களில் எழுதி வருகிறார். திருக்குடமுழுக்கு விழா மலர், போடிநாயக்கனூர் ஜமீன் வரலாறு, மலர்ந்த பக்கங்கள், நேபாள நாட்டின் பயண அனுபவங்கள் போன்ற நூல்களை எழுதி வெளியிட்டு உள்ளார்.

29-11-1988-ல் கவியரசு வைரமுத்து இவரது கவிதைத் தொகுப்பினைப் பார்த்துப் பாராட்டி 'கவிஞர் பட்டம்' சூட்டினார். 2-3-1991-ல் காஞ்சிபுரத்தில் கவிதைச்சோலை என்ற இலக்கிய சங்கத்தில் பாவேந்தர் பாரதிதாசன் மைந்தர் மன்னர் மன்னன் இவருக்கு 'பாவேந்தர் பட்டயம்' வழங்கினார். 25-7-1992-ல் சென்னையில் கண்ணியம் இதழ் ஆசிரியர் கோ. குலோத்துங்கன் பொன்விழாவில் அறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகன் பரிமளம் அவர்கள் இவருக்கு 'இலக்கியச் சிற்பி' என்ற விருதினை வழங்கினார். 26-3-2000-ல் தஞ்சாவூரில் இதயகீதம் இலக்கிய சங்கம் குமரிஅனந்தன் தலைமையில் இவருக்கு 'கவியருவி' விருதினை வழங்கி கௌரவித்தது.

மேலும் அரிமா சங்கம் மாவட்ட அளவில் 'லயன் ஆஃப் த இயர்' அகில உலக அரிமா சங்கத் தலைமை அலுவலகத்திலிருந்து எம்.ஜே.எஃப் விருது வழங்கப்பட்டது. 1986-ல் அரிமா மாவட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசும், 23-9-1990-ல் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய 'ரமேஷ்-மகேஷ்' இலக்கியப் போட்டியில் முதல் பரிசும் பெற்றார். 1[illegible]-12-1990-ல் மலேசிய உலகத் தமிழ் மாநாட்டில் கவியரங்கத்தில் கலந்து கொண்டு கவிதை படைத்த பெருமைக்குரியவர்.

முகவரி : கவிஞர். **மு. பரதபாண்டியன்,**
61, அரண்மனை,
பேரையூர் - 625703, மதுரை. ✆ 04549—25696

படிப்பகம்

www.padippakam.com

# வாமனத் துளிகள்...

நினைவு உரத்தால்
களையின்றி வளர்கிறது
காதல்பயிர்!

— 'புன்னகை' சிவா
சமத்தூர், பொள்ளாச்சி

தலையில் ஒளிசுமந்து
தண்டவாளத்தில் எதைத் தேடுகிறது
நடுநிசி ரயில்?

— வலம்புரி லேனா
திருவாலம்பொழில், தஞ்சை

வாழ்க்கை எல்லா கதவுகளையும்
அடைத்த பின்னும்
தட்டுகிறேன் விடியலை நோக்கி!

— வீணாநிஹரி
திருவல்லிக்கேணி, சென்னை-5

நெடுந்தூர பயணம்
ஓய்வு எடுக்கவில்லை
காற்று!

— பாரதிச்செல்வன்
வயலோகம், புதுக்கோட்டை

படிப்பகம்

www.padippakam.com

தீப்பெட்டியைத் திறந்தேன்,
அடுக்கடுக்காய்
பிஞ்சு விரல்கள்!

— பொன். மாதேஸ்வரன்
ஆட்டையாம்பட்டி, சேலம்

எந்த ராஜ்ஜியத்தைப் பிடிக்க
இவ்வளவு நட்சத்திரப் படைகளோடு
போகிறது நிலா?

— இரஜகைநிலவன்
தானே, மும்பை-88

ஒவ்வொரு தேர்தலிலும்
தோற்றுக் கொண்டே இருக்கிறது
இந்திய ஜனநாயகம்!

— பொன்னியின்செல்வன்
திருச்சி-14

பரட்டைச் சிறுவன்
ஏப்பமிட்டான்
குந்தகநெடி.

— Dr. ப. ஸேனாகதிரவன்
ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி, சென்னை-1

படிப்பகம்

www.padippakam.com

# பொன் வீணை

பொன்னின் வீணை புழுதி படிந்து
மண்ணில் கிடக்கிறது
தன்னை மீட்டும் ஒருவனுக்காகத்
தவமிங் கிருக்கிறது

படரத் துடிக்கும் பருவப் பைங்கொடி
காற்றில் அலைகிறது - அது
பற்றிப் படரக் கொழுகொம் பொன்றைத்
தேடித் தவிக்கிறது

ஆடத் துடிக்கும் அழகு மயிலொன்
றறைக்குள் கிடக்கிறது - தன்
காதல் தலைவன் மேகத்தின் வரவைக்
காணத் தவிக்கிறது

வசந்த வனத்தின் விளக்கு ஒன்று
அழுது வடிகிறது - அது
வரதட் சணையாம் எண்ணெயில் லாமல்
மங்கி மடிகிறது.

— ஆற்காடு மு. வாணி

★ அமுதசுரபி கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை.

படிப்பகம்

www.padippakam.com

# எய்ட்சு பற்றிய பணிமனை

★ ரசாகந்தி மெழுகு, வெள்ளறுகு, பாகற்பழக் கூட்டு பயனுள்ளது. ★

சென்னை அக். 20, 21— இந்திய நலவாழ்வு நல்லறம் எய்ட்ஸ் பற்றிய பணிமனை உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் சி.என். **தெய்வநாயகம்** தலைமையில் சித்த மருத்துவர் **ஆனந்தகுமார்** முன்னிலையில் எழும்பூர் பாந்தியன் சாலையிலுள்ள தமிழ்நாடு எய்ட்சு கட்டுப்பாடு சங்க கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

**கிருசுதுதாசு காந்தி** இ.ஆ.ப, **பழனிச்சாமி, யோகீசுவரன்**, சித்த மருத்துவர்கள் **ஏ.ஜி. கணபதி அடிகள்**, திருவாரூர் **அ.மு.லெ. பாலசுப்பிரமணியம்** பாளையங்கோட்டை **சொர்ணமாரியம்மாள்** பணிமனையை வழி நடத்திச் சென்றனர்.

நோய்க்கான அறிகுறிகள், நோய் தடுக்கும் உணவுகள், சித்த மருந்துகள், உண்ணண வேண்டிய உணவுகள், வெட்ட வெளி தியானம் பற்றி சித்த மருத்துவர்கள் விளக்கிக் கூறினர்.

சித்த மருத்துவ கட்டுரையாசிரியர்கள், தினமணி புகழ் சிவராமன், தினமலர் புகழ் பரங்கிப்பேட்டை வி.ஆர். சோழ ராஜன், ராணி வார இதழ் புகழ் தேவூர் ஜி. மணிவாசகம் பங்கேற்றனர்.

மேலும் சித்த மருத்துவர்கள் பேரையூர் அ. தேவராஜன் சிதம்பரம் பதஞ்சலி, பூபதி, ராமமூர்த்தி, குருநாதன், திருத்துறைப்பூண்டி சதா. பாலசுப்பிரமணியம், பெங்களூர் பால. ரவீந்திரன், மயிலாடுதுறை தமிழ்நம்பி, சத்தியமங்கலம் கண்ணப்பன், சேலம் மகாலிங்கம், சென்னை கீ.ரா. சுப்பிரமணியம், துரை மாணிக்கம், வெங்கடராசப்பர், விநாயகம், சண்முகம், சந்திரபாபு, சிவகுமார், காஞ்சிபுரம் வெங்கடேசன் ஈரோடு எசு.கே.எம்., வன்றாந்தாங்கல் இராம. வேதநாயகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



# 'ஏழைதாசன்' எஸ். விஜயகுமார்

பாலகுமாரன் நாவல்களில் வருவது போன்ற தொடர் வீதிகளையும் குறுக்கும் நெடுக்குமான சந்துகளை கடந்து அடப்பன்வயல் வீதியில் அந்த இடத்தை அடைந்தோம். புதுக்கோட்டையின் பக்குவப்பட்ட இதழாளர் ஏழைதாசன் எஸ். விஜயகுமார் இனிதே நம்மை வரவேற்று தாங்கள் யார் என்பது போன்ற பார்வையை வீச, எம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் அகம் மகிழ்ந்தார் அன்யோன்யமாய்ப் பழகும் தன் குணத்தை கொட்டினார். அவரின் கண்களிலேயே தீர்க்க இயலா இதழ்தாகம் பிரவாகமெடுக்கிறது. அவரின் வார்த்தைகளோடு இலக்கியம் பின்னிக் கிடக்கிறது.

பத்திரிகைத் துறையில் 15 வருட கால அனுபவம். ஆழமாய் யோசிக்கும் சுபாவம். சிற்றிதழ் நடத்துவதென்பது சாதாரணமல்ல... அது ஒரு வேள்வி. அது ஒரு போதை இப்படி பக்குவப்பட்ட அந்த கம்பீர உருவம் பல தளங்களை நம்மோடு அலசியது. ஹைக்கூ வளர்ச்சியில், தமிழ்க் கவிஞர்களை ஒன்றிணைக்கும் தலையாய இடம் ஏழைதாசனிற்கு உண்டு. முதலில் ஹைக்கூ-50 அடுத்து நூறு (இத்தொகுப்பிற்கு ஓவியக் கவிஞர் அமுதபாரதி அணிந்துரை வழங்கி சிறப்பித்திருந்தார்) தற்போது 200 ஹைக்கூ கவிஞர்களை ஒன்றிணைத்து ஐக்கூ-200 வெளியிட்டு உள்ளார். மழைவிட்ட பின்னும் தொடர்கின்ற தூறலாய் சூட்டோடு சூடாய் 1000 ஹைக்கூ கவிஞர்களை இணைக்கும் முயற்சிகளுக்கான ஆயத்தப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

அச்சகத்தோடு இரண்டறக் கலந்த வாழ்வு. அச்சகப் பணியில் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு ஜீவனம் நடத்துகின்ற நிலை. இருந்தும் தன் நிலை இழக்காது தரமாய் இதழை வெளிக் கொணர்வதில் அவர் காட்டும் ஆர்வம் நம்மை அசர வைக்கிறது.

"பாரு தமிழா என் சொத்தை. இதான் என் சம்பார்த்தனை. 15 ஆண்டு காலமா என்னோட வருமானம்..." என்ற விஸ்தீரணக் குரலில் அவர்

படிப்பகம்

www.padippakam.com

கை காட்டிய திசையை நோக்குகையில் மனசு கனத்துப் போனது. அவ்வளவும் கடிதங்கள்... படைப்புகள்... புத்தகங்கள்... சிந்தனைகள் கனத்த ஒரு பத்திரிகையாளனின், ஒரு நுன்னிய வாசிப்பாளனின், ஒரு தரமான விமர்சகரின் இந்த வார்த்தைகள் எம் கண்களைத் திரையிடச் செய்ததுண்மை.

இப்படியான பணியில் வசதி, அந்தஸ்து வாய்க்கவில்லை யென்றாலும் சிற்றிதழ் உலகில் ஒரு அழியா இடம் ஏழைதாசனிற்கு உண்டு. கனவுகளும் கற்பனைகளும் உலகமுழுவதும் பரந்து விரிந்திருக்கும் நண்பர்கள் வட்டமுமே அவரின் சுவாசம்.

காற்றும் கவிஞனும் மரிப்பதில்லை என்பதற்கிணங்க காலமும் ஏழைதாசனும் பிரிவதில்லை என்றே எழுதத் தோன்றுகிறது. கம்பீரக்குரலில் வார்த்தைகள் விடுத்த விஜயகுமாரை, காலத்தின் பக்கங்களில் தடம் பதித்த விஜயகுமாரை, கானல்நீராகவே அன்பைப் பார்க்கும் கட்டத்தில் காட்டாறாய் அன்பை கொட்டிய விஜயகுமாரை உணர்ச்சிக் கரங்களால் ஆரத் தழுவி விடைபெறும் போது பிரிவின் கொடுமை நெஞ்சைக் கிள்ளியது.

**ஏழைதாசன் கௌரவிக்கப்பட வேண்டியவன்**
**அரசால் அரவணைக்கப்பட வேண்டியவன்**

— கவியோவியத்தமிழன், 'மலம்' இதழ்-3

---

## ஏ ழை தா ச ன்

* ஆண்டுக் கட்டணம் : ரூ. 35/-
* வாழ்நாள் கட்டணம் : ரூ. 350/-

● 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.

☐ E. Mail : ealaidhason@hotmail.com

☐ Internet : http // www.ealaidhason.8m.com

Address ; Adappanvayal 8th Street, Pudukkottai-622 002, TN, India

படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் அல்பம்

ஈழநாட்டின் வரலாற்று - புவியியல் - பொருளாதார - சமய - செய்தி - பெரியார்கள் போன்றவற்றின் புகைப்படங்கள் ஒரு அல்பமாகக் கனடாவில் வெளியிடப்படவுள்ளது. அதுவே, ''தமிழர் அல்பம்'' ஆகும்.

உங்களிடம் இவற்றுடன் தொடர்புடைய படங்கள் இருந்தால் பிரதிகளை அனுப்பி வைக்கலாம். தேவை ஏற்படின் படங்களைத் தங்களுக்குத் திருப்பி அனுப்பி விடலாம்.

படங்களுக்குப் பின் படம் பற்றி குறிப்பு - விளக்கம் ஆகியவற்றை உங்கள் முகவரியுடன் மறக்காமல் எழுதி விடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ATHAVAN PUBLICATION,
371, Orton Park Road, Unit - 120,
Scarborough, Ontario,
CANADA. M1G 3V1.

படிப்பகம்

www.padippakam.com

# அக்குபஞ்சர்

## மாற்றுமுறை மருத்துவப் பயிற்சி

ஒவ்வொரு மாதமும்
4 நாட்கள் கான்டாக்ட்
செமினார் வகுப்புகள்
மற்றும்
நேரடிப் பயிற்சி
காரைக்குடியில்
நடத்தப்படுகிறது.

6 மாதம், 1 வருடம் டிப்ளமா
பயிற்சிகள் ரெகுலர் மற்றும்
தொலைத் தொடர்புப் பயிற்சி

இடம்
' உங்கள் தாய் வீடாகிய '
அப்துல்லா மிஷன் மருத்துவமனை
காரைக்குடி.

உடற்கூறு இயல்
சேர்க்கப்பட்ட
புதிய இரண்டாம் பதிப்பு
ரெய்கி அக்குபஞ்சர்
நூல் விலை ரூ. 125/-
(அட்டை உட்பட
பக்கம் - 290)

அக்குப்பஞ்சர், காந்த சிகிச்சை, கொரியன் சுஜோக் அக்குபஞ்சர், டி-அடிக்ஷன், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஹிப்னோ யோகா, ப்ரானிக் சிகிச்சை, ரெய்கி - அக்கு சிகிச்சை, யோகா, தியானம், ரெஃப்லக்சாலஜி, நாடி பரிசோதனை Acu Touch போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## அக்குபஞ்சர் நிபுணர் பயிற்சி

டிப்ளமா பயிற்சி பெற்றவர்கள் மேற்படிப்பு பெறவும் பயிற்சி அளிக்கப்படும்

**வகுப்புகள் நடத்தவும் டிப்ளமா சான்றுகள் வழங்கவும் ATAMA மூலம் அனுமதி பெற்றுள்ளோம். படிப்பு முடித்தவர்கள் மருத்துவம் செய்யலாம்.**

ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.



'புரட்சிப்புயல்'
Dr. C. அப்துல்லாசேசு.

**அப்துல்லா மிஷன்**
**மருத்துவமனை,**

பெரியார் சிலை அருகில்,
காரைக்குடி - 630 001.
செல் : 98424-23082, 98421-53895
தொலைபேசி : 04565-433735, (R) 438082, 437791

படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI. Regd. No. 55308 / 92
R.C.No. 22449 / 98 ★ Regd.No. PMG / CR / 01 / 2001 / PDK

# அய்க்கூ - 500

தமிழ்க் கவிதை உலகில் ஏழைதாசன் 'முதன்முதலாக' சில முன் முயற்சிகள் செய்து வந்துள்ளதை பலரும் அறிவர்.

அய்க்கூ-50, அய்க்கூ-100, அய்க்கூ-200 இவற்றை அடுத்து அய்க்கூ-500 வெளியிடலாம் என திட்டமிட்டுள்ளோம்.

இவ்வரிய முயற்சிக்கு வாசகர்கள், படைப்பாளர்களாகிய நீங்கள் எல்லாம் ஆதரவு வழங்கிட அன்புடன் வேண்டுகிறோம்.

முதல்கட்டமாக, உலகெங்கும் வாழும் தமிழ் அய்க்கூ கவிஞர் பெருமக்கள் தங்களது முழு முகவரி மற்றும் அய்க்கூ எழுதும் தோழமைக் கவிஞர்களின் முகவரிகளை எமக்குத் தெரியப்படுத்துவது நமது முயற்சிக்கு முன்னோட்டமாக அமையும்.

அத்துடன் ஒவ்வொரு கவிஞரும் தங்கள் பகுதியில் உள்ள எத்தனைக் கவிஞர்களை இத் தொகுப்பில் கலந்து கொள்ளச் செய்ய இயலும்? என்பதை அறியத்தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உலகளாவிய அளவில் தமிழ் அய்க்கூக்களை எடுத்துச் செல்லவும் அய்க்கூவுக்கென தனித்த, நிலைத்த ஓரிடத்தை தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தவும் எண்ணியுள்ளோம்.

தனி நூலாக வெளியிடவும் நல்லமுறையில் வெளிக் கொணரவும் உங்கள் ஒவ்வொரு பங்களிப்பும் எமக்கு அவசியத் தேவை. நன்கொடை — விற்பனை — கவிதை சேகரிப்பு என்று உங்கள் பங்களிப்பு எதுவாகவும் இருக்கலாம். இது குறித்து எமக்கு எழுதுங்கள் விரைந்து.

பெறுந 27.

Mr. S. MANOHARAN,
Editor, 'AMMA',
ESE - 13
210, AVE DU 8 MAI 1945,
93150 - LE BLANC MESNIL,
FRANCE.

Sea Mail

முகவரி தமிழ்நாடு

Address : 26, Adappanvayal 4th Street, Pudukkottai-622002 TN, India